# <u>க்ர்மா என்றால் என்ன ? அதன் வினைப்பயன்</u>

முற்பிறவியின் க்ர்மபலனுக்கு ஏற்ப அனைவருக்கும் பிறவி ஏற்படுகிறது. அந்தப் பிறவியில் தனது நிலையில் இருந்து கொண்டு தனக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை அனைவரும் செய்தால் மட்டுமே க்ர்மபலன் தீரும். க்ர்மபலன் தீர்ந்தால் மட்டுமே ஒரு ஜீவன் இறைவனை அடைய முடியும். ஆத்மா இறைவனை அடைந்தால் மட்டுமே மீண்டும் பிறக்காது. மீண்டும் பிறக்காமல் இருந்தால் மட்டுமே ஒருவன் நிரந்தர சுகத்தை அடையமுடியும். அந்த நிலையை எட்டும் வரை ஒருவன் தனக்கு கொடுக்கப்பட்ட கடமையை செய்ய வேண்டும். இந்த உலகத்தில் இரண்டு வகையான ஜீவன்கள் பிறக்கின்றன. தமிழ் இலக்கியத்தில் அதை ஊழ் அல்லது ஊழ்வினை என்றே குறிப்பிடுகிறது. கடமை செயல்கள் செய்ய வேண்டியவன் அதாவது கடமைகள் இருக்கின்ற ஒருவன் கடமைகளை விட்டுவிட கூடாது. அவனுக்கு விதிக்கப்பட்ட கடமையை செய்ய வேண்டும். வாழ்க்கை என்பது எப்போது காரணம் மற்றும் விளைவு மற்றும் பிரச்சனைகள் என்ற முறையில் நடக்கிறது. நம் அனைவருக்கும் பிரச்சனை என்பது வாழ்க்கையில் ஏதாவது ஒரு இடத்தில் கஷ்டம் - நஷ்டங்கள் வரும். அதுவே நமது வாழ்க்கை என்பதை நாம் உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது நாம் அனைவரும் வந்த க்ர்மவினை பலனுக்குரிய விளைவையோ, அல்லது பிரச்சனைகளையோ சந்தித்து நம்முடைய வாழ்க்கையில் அனுபவித்து வருகிறோம் என்றாலும் அவதிப்பட்டு வந்தாலும் சரி, ஆனால் அதற்கு ஒரு காரண காரியம் இல்லாமல் இருக்குமா?

**காரணத்தை நம்மால் பார்க்க முடியாது. எந்த ஒரு காரணம் இல்லாமல் ஒரு விளைவு என்பது அதாவது பிரச்சனை என்பது எல்லோருக்கும் வாழ்க்கையில் ஒருமுறை வரும். இந்த காரணத்தைத்தான் க்ர்மா என்று விதி பயன் என்று கூறுகிறோம்.**

**க்ர்மா என்பது ஒருவருக்கு விதிக்கப்பட்ட தலைவிதி அல்ல. அது அவரது வினைப்பயன் அல்லது க்ர்மவினை ஆகும். க்ர்மவினை பயன் என்பது அவரவர் செய்யும் செயலில்தான் இருக்கிறது. ஒருவர் நல்ல செயல்களைச் செய்தால் அதன் பயன் நன்மையைத் தரும். மாறாக தீய செயல்களை செய்து வந்தாலும், தீவினைகளை செய்தாலோ மனிதனுக்கு துன்பத்தை தரும். க்ர்மங்கள் இருக்கும் வரை, செய்துதான் ஆக வேண்டும். க்ர்மங்களின் (வினை பயன்) நாம் அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும். அதை கண்டு ஓடினால் மீண்டும் நம்மைவந்து பாவமே சேரும். க்ர்மங்கள் அனைத்தும் முடிக்கப்பட்ட உடன் அந்த**

**மனிதன் மீண்டும் பிறவி எடுக்காத இறைநிலையை அடைய முடியும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும்.**

நாம் செய்யும் செயல்களை நாம் அனைவரும் உற்றுநோக்கி நன்கு கவனிக்க வேண்டும். நமக்குள் கடவுள் இருக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். நாம் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் தனக்கோ பிறருக்கோ தற்காலத்திலோ, அல்லது பிற்காலத்திலோ உடலுக்கோ, மனதிற்கோ துன்பம் விளைவித்தால் அதுவே பாவம் எனப்படும். மிகவும் மிகுந்த இன்பமும், அல்லது துன்பமும் இல்லாமல் அமைதியான மன நிலையுடன் தற்காலத்திலும், பிற்காலத்திலும் பிறருக்கும் நமக்கும், உடலுக்கும், மனதிற்கும் இன்பம் பயக்கும் செயல்களே புண்ணியம் எனப்படும்.

இந்த புண்ணியமும், பாவமும் சேர்ந்துதான் கர்மா எனப்படும். இன்பமும், துன்பமும் தனித்தனியாக இல்லை என்பதை நாம் உணர வேண்டும். இன்பத்தின் அளவுமுறை மாறும் போதுதான் இன்பத்தின் மறுபெயராகும் துன்பம் விளையும் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள்.

**இயற்கையோடு இணைந்திடுவோம் !**
**ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கிடுவோம்!!**

**SIDDHAS HEALTHY LIFE ADVISORY CENTRE**